உ

முருகா சரணம்



# இருபத்தி நான்காவது ஆண்டு
# ஸ்கந்த ஷஷ்டி விழா மலர்

1977

முருகன் திருவருட் சங்கம்
46, பெரிய தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை-600 005.

*With best compliments*
*from*

# KHATAU JUNKER LIMITED

Dattapada Road, Borivli East,
BOMBAY-400 066

★

Manufacturers of

**Power Factor Correction Capacitors**
**and**
**paper Capacitors**

உ

முருகா சரணம்

# முருகன் திருவருட் சங்கம்

46, பெரிய தெரு திருவல்லிக்கேணி
சென்னை—600005

## 24-வது ஆண்டு ஸ்கந்த ஷஷ்டி விழா

(11–11–77 — 17–11–77)

சிறப்பு மலர்

---

செயற்குழு :

T.S. வாசுதேவன் தலைவர்

M.S. விஸ்வநாதன் உபதலைவர்

P. சுந்தரம் செயலாளர் & பொருளாளர்

R. கிருஷ்ணன், V. கணேசன்
இணைப்புச் செயலாளர்கள்

N. நாராயணசுவாமி தணிக்கையாளர்

உறுப்பினர்கள் :

G. துரையப்பன் M.S. அருணாசலம்
K. நாராயணன் K-R.A. பத்மநாபன்
V. முத்து கிருஷ்ணன் D.அனந்தசுப்ரமண்யன்.

*WITH BEST COMPLIMENTS*

*FROM*

# Shardlow India Ltd.,

Drop Forgers and Stampers

"HUZUR GARDENS"

MADRAS—600 011

卐

Telegrams
**STAMPINGS**

Telephone
**64242 (5 Lines)**



# வருகிறது ! வெள்ளிவிழா !

P. சுந்தரம் செயலாளர் & பொருளாளர்

ஆறுமுகப் பெருமான் திருவருளால் 1954-ம் ஆண்டு ஜூன் மீ 27 அன்று திருவல்லிக்கேணி பெரியதெரு ஸ்ரீஅரசடி கற்பகவிநாயகர் வசந்தமண்டபத்தில் காமாக்ஷி தாசர் ஸ்ரீ R. சோமசுந்தரம் ஐயர், பிரம்மஸ்ரீ T.V. சீதா ராம பாகவதர் ஆகியவர்கள் திருப்புகழைப் பரப்பும் நோக்கத்துடன் "முருகன் திருவருட் சங்கத்தை" தோற்றுவித்தார்கள்.

கடந்த இருபத்துமூன்று ஆண்டுகளில் சங்கத்தின் நிரந்தர நிகழ்ச்சிகளாக ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை, மற்றும் கிருத்திகை, ஷஷ்டி, விசாகம் போன்ற நன்னாட்களில் ஆங்காங்கே திருப்புகழ் பஜனை நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் கடைசி வாரத்தில் திருத்தணி திருப்படிவிழா ஸ்தல யாத்திரையும், 1967 முதல் ஒவ்வொரு ஆண்டும் பல தலங்களுக்கு யாத்திரை சென்று வருவதும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

கடந்த 23 ஆண்டுகளாக ஸ்கந்த ஷஷ்டி விழா மிகச் சிறப்பான முறையில் கொண்டாடப் பெற்று வருகிறது. நமது சங்கத்தின் வாயிலாக இதுவரை வெளிவந்துள்ள நூல்களில் 1966-ல் வெளிவந்த "திருப்புகழ்திரட்டு" நூலும் 1975-ல் வெளிவந்த கந்தரநுபூதி—உரைநூலும் குறிப்பிடத்தக்கவை.

திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரநுபூதிப் பாடல்களில் சென்ற மூன்று ஆண்டுகளாகப் போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்கப்படுகிறது.

இவ்வாறாக அருணகிரிநாதரின் ஒப்பற்ற நூல்களைப் பாடியும் பரப்பியும் பக்தியுணர்வை வளர்க்கப் பெரும் பணி செய்துவரும் நமது சங்கத்தின் 25வது ஆண்டுவிழா—

"வெள்ளிவிழா" அடுத்த ஆண்டில் மிகப் பெரிய அளவில், மிகச் சிறந்த முறையில் கொண்டாட இறையருளால் தீர்மானிக்கப் பெற்றுள்ளது. அவற்றிற்கான திட்டங்களாவன :

1. ஆறுபடைவீடுகள் மற்றும் சில முக்கிய திருப்புகழ்ப் பெற்ற தலங்களில், அடியார்களின் பொருளுதவியுடன் திருப்புகழ்ப் பாக்களைச் சலவைக் கற்களில் பொறித்துப் பதித்துப் வைத்தல்.

2. ஒவ்வொரு மாதமும் ஒரு ஞாயிற்றுக்கிழமையில் சென்னைக்கருகிலுள்ள திருப்புகழ் பெற்ற ஒரு கோயிலில் முருகப்பெருமானுக்கு அபிஷேகம் செய்து வழிபாடு செய்தல்.

3. திருப்புகழ் பெற்ற ஸ்தலங்களின் வரலாற்றுக் குறிப்புக்களைத் தொகுத்து புத்தகமாக வெளியிடுதல்.

4. திருப்புகழ் வளர்ச்சிக்கு பெரும் தொண்டாற்றி வரும் அடியார்களைப் பாராட்டி கௌரவித்தல்.

5. வெள்ளிவிழா சிறப்புமலர் ஒன்று வெளியிடுதல்.

6. 'திருப்புகழ்த் திரட்டு' மறுபதிப்பை வெளியிடுதல்.

இத்தகைய நற்காரியங்களும் மேலும் பல நல்ல பணிகளும் இனிது நிறைவேற முருகனடியார்களும், பேரன்பர்களும் பொருளுதவியும் இதர உதவிகளையும் அளித்து வெள்ளிவிழா சிறப்பாக நடைபெற உதவும்படி கேட்டுக் கொள்கிறோம். சங்கத்தின் பணிகள் நாளும் வளர்ந்து எங்கும் இறையுணர்வும், பக்தியும் திருப்புகழ்த் தொண்டும் பெருக அன்பர்கள் அனைவரையும் சங்கத்தின் உறுப்பினராகுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

பெருத்தபொருளீர் ! நீங்கள்வாருமே !

**மயிலையும் அவன் திருக்கை அயிலையும் அவன்**
**கடைக்கண் இயலையும் நினைந்திருக்க வாருமே !**

*WITH BEST COMPLIMENTS*

*FROM*

# SIMPSON & CO LTD.,

Manufacturers & All India Distributors of Perkins Automotive, Tractor and Industrial Diesel Engines & Spare Parts.

202/203 MOUNT ROAD,
MADRAS-600 002

*BRANCHES:*

Bangalore : Ootacamund : Secundrabad :
Tiruchirapalli

கந்தவிரதங்கள் என்றவுடன் மூன்று எண்ணங்கள் நமக்கு எழலாம். 1. கந்தனைப்பெற விரதமிருந்தோர் 2. கந்தன் மேற்கொண்ட விரதம் 3. கந்தனை அடைய நாம் மேற்கொள்ளும் விரதங்கள்.

அசுர ஆட்சியில் அவலமுற்று வருந்திய வானவர்கள் முக்கட் சுடர்ப்பெருமானைத் திருக்கயிலையில் வணங்கி, தம் அல்லல் நீங்க அருள் புரியுமாறு போற்றிப் பரவினர். பெருமானும் அவர்கள் குறை தீர ஒரு திருக்குமாரனை அருளத் திருவுளம் பற்றினார். வானவர் மேற்கொண்ட விரதம் நிறைவேறியது. உலகமுய்ய உதித்தனன் நம் திருமுருகன் !

அருவமும் உருவுமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்கள்ஆறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே
ஒரு திருமுருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய.

—(கந்தபுராணம்)

முருகவேள் சிவபெருமானைப் போற்றிய தலங்களாக 'வேளூர்' என்ற பெயர் தாங்கிச் சில சிவத்தலங்கள் விளங்குகின்றன. கீழ் வேளூர், புள்ளிருக்கு வேளூர், பெருவேளூர் என்பன அவை. இவற்றையன்றிச் சேய்ஞலூர் என்ற தலமும் முருகப்பெருமான் சிவ பெருமானைப் பூசித்ததால் அப்பெயர்பெற்றதென்பதனைத் தெய்வச் சேக்கிழார்,

பூந்தண் பொன்னி யெந்நாளும் பெய்யாதளிக்கும் புனல்நாட்டு
வாய்ந்த மண்ணித் தென்கரையின் மன்ன முந்நாள் வரைகிழிய
ஏந்து மயில்வேல் நிலைகாட்டி இமையோர் இகல்வெம்பகை
கடக்குஞ்
சேந்தன் அளித்த திருமறையோர் மூதூர் செல்வச் சேய்ஞலூர்

—சண்டேசுரநாயனார் புராணம்

என்று அருமையாகக் காட்டுவார்.

இனி, கந்த விரதங்களைச் சற்றுச் சிந்திப்போம். அவை வார விரதம், நாள்விரதம், பக்ஷ விரதம் என மூவகைப்படும்.

**வாரவிரதம்:** இது வெள்ளி விரதம் எனப்படும். ஐப்பசி மாதத்து முதல் வெள்ளிக்கிழமை தொடங்கி, பிரதி வெள்ளிக்கிழமையிலும் மேற்கொள்ளும் விரதம் இது. அன்று அதிகாலையில் புண்ணிய நன்னீராடி, முருகப்பெருமானை முறையாகத் தியானிக்கவேண்டும். தூய்மையான இடத்தில் நெல்லைப் பரப்பி, கலசத்தில் நீர் வைத்து,

# THIRU AROORAN SUGARS LTD.,

VADAPATHIMANGALAM

Tanjore Dist.,

(Tamil Nadu)

*Manufacturers of*

*BEST QUALITY*

WHITE CRYSTAL SUGARS

**Registered Office :**

17/4 Nungambakkam High Road,

P. B. No. 3328 2nd Floor

Madras-600 034

Telephone 86001/3 Lines Telex : SPIRIT M S 7180

TELEGRAMS: "FINE SUGAR"

மாவிலை, தருப்பை, கூர்ச்சம், மாலை, ஆடை முதலியவற்றால் அலங்கரித்து, கந்தனின் திருவுருவத்தை அதன்மீது எழுந்தருளப்பண்ணி விதிப்படி பூசிக்கவேண்டும். அன்று மாலையில் திருக்கோயிலில் முருகப்பெருமானை வழிபட்டு, அங்கே நிவேதித்த பழம் முதலிய வற்றையே அருந்தவேண்டும். மறுநாள் நீராடி, கும்பத்தையும், முருகன் பிம்பத்தையும் பூசித்து அவற்றை அந்தணர்க்குத் தானம் செய்ய வேண்டும். அன்று காலை ஒன்பது நாழிகைக்குள்ளாக அடியார்களுடன் பாரணை செய்தல் வேண்டும். இவ்விரதத்தைச் சித்திரை மாதத்து முதல் வெள்ளிக்கிழமை தொடங்கிச் செய்வதும் உண்டு.

பகீரதன் என்னும் மன்னன் ஆட்சி செய்து வருங்காலத்தில் கோரன் என்னும் அசுரன் வலிமை பெற்று, பகீரதனது ஆட்சியைக் கவர்ந்து கொள்ளவே, மன்னன் கானகம் செல்ல நேரிட்டது. அங்கே பார்க்கவ முனிவர், பகீரதன் நிலைக்கிரங்கி,

"வேற்கரன் மகிழும் ஆற்றால் வெள்ளிநாள் விரதம் தன்னை
நோற்குதி மூன்றியாண்டு நுங்களுக்கு அல்லல் செய்த
மூர்க்கனும் முடிவன் நீயே முழுதுலகாள்வை' என்றான்.

—(கந்தபுராணம்)

இவ்வாறு பகீரதன் வெள்ளிக்கிழமை விரதமேற்று வள்ளலாம் கந்தனின் வான் கருணையால் மீண்டும் அரசெய்தி இன்புற்றான்.

வெள்ளிக்கிழமை விரதச்சிறப்பை வசிஷ்ட மாமுனிவர் முசுகுந்தனுக்குக் கூறுகின்றார் :

"எள்ளரும் சிறப்பின்மிக்க எழுவகை வாரம் தன்னுள்
வெள்ளிநாள் விரதம் தானே விண்ணுவர் உலகம் காத்த
வள்ளல் தன் விரதம் ஆகும் மற்றது புரிந்த மேலோர்
உள்ளமேல் நினைந்த எல்லாம் ஒல்லையில் முடியும் அன்றே"

—(கந்தபுராணம்)

உள்ளத்தில் நினைத்ததை அள்ளிவழங்கும் வள்ளலின் வெள்ளிக் கிழமை விரதத்தை விரிக்கிற் பெருகும்.

**நாள் விரதம் :** இதுவே கார்த்திகை விரதம் எனப்படும். கார்த்திகை மாதத்துக் கார்த்திகை முதலாக ஒவ்வொரு மாதக் கார்த்திகை நட்சத்திரத்தன்றும் இவ்வாறு பன்னிரண்டாண்டுகள் அநுட்டிக்க வேண்டிய விரதம் இது. கார்த்திகைக்கு முதல்நாள் நண்பகல் மட்டுமே உணவருந்த வேண்டும். கார்த்திகையன்று பூரண உண்ணா நோன்பு இருத்தல் வேண்டும். மறுநாட்காலை

'SWAMI'

*With the Compliments of*

**SWAMI & CO.,**

Tanners And Exporters

34, Sydenhams Road, Madras-600003

*With the Best Compliments*

of

REICHHOLD CHEMICALS
INDIA LIMITED

Post Box No : 3, Madhavaram
Madras-600 060

*Manufacturers of "SYNTHETIC RESINS"*

FOR

**Plywood, Chipboards, Particle Boards, Shellcore, Shellmould Foundries, Brakelinings, Fibreglass Reinforced Plastics, Paper, Paint and Varnish Industries, Printing Inks, Chewing Gums etc.**

ஒன்பது நாழிகைக்குள் உணவு உட்கொள்ளவேண்டும். கார்த்திகை தினத்தன்று விதிப்படி முருகவேளைப் பூசிக்க வேண்டும்.

நாரதமுனிவர் பன்னிரண்டாண்டுகள் இவ்விரதத்தை அநுட்டித்தே மேலான பதவி பெற்ருர். இவ்விரதச் சிறப்பினை விநாயகப் பெருமானே நாரத முனிவருக்கு எடுத்துரைத்தருளினுர் :

முன்னவன் அதனைக் கேளா முழுதருள் புரிந்து நோக்கி
அன்னது பெறுதி திண்ணம் ஆறுமாமுகத்து நம்பி
பொன்னடி வழிபாடாற்றிப் பொருவில் கார்த்திகை நாள் நோன்மைப்
பன்னிரு வருடங்காறும் பரிவுடன் புரிதி என்ருன்.

இவ்விரதச் சிறப்பினைக் கூறுங்கால்,

இப்படி ஆரல் நாளில் விரதத்தை இயல்பின் நோற்று
முப்புவனத்தின் வேண்டும் முறைமையை அடைந்த நீரார்
மெய்ப்படு தொகையை யாரே விளம்புவர்

என்று கந்தபுராணம் போற்றுகின்றது.

இவ்விரத மேற்கொள்வோர் ஒரு கைத் தண்ணீரையே அருந்துதல், தருப்பையில் படுத்தல், கந்தபுராணம் படித்தல், கேட்டல், கார்த்திகை நாள் முழுதும் உறங்காது விழித்து இறைவனைச் சிந்தித்தல் ஆகியவற்றைத் தவருது கொண்டொழுகுதல் வேண்டும்.

ஓர் அந்தணன் இவ்விரதமிருந்து மனு மன்னனுனன். கார்த்திகை விரதம் நோற்றுக் கந்தனின் கருணைக்கிலக்காகி இன்றும் பலர் இன்புற்று விளங்குதல் கண்கூடு.

பக்ஷவிரதம் : இதுவே சஷ்டி விரதம் என்று போற்றப்படுகின்றது. இவ்விரதத்தை மனத்துட் கொண்டே சட்டியிலிருந்தால் அகப்பையில் வரும் என்ற பழமொழியும் எழுந்தது. சஷ்டிவிரதம் இருந்தால் நற்புத்திரப்பேறு கிட்டும் என்பது இதன் பொருள் என்பர். ஆனுல்சஷ்டி விரதம் இருந்தால் இறைவன் நம் உள்ளத்தில் குடி கொள்வான் என்று பொருள் கொள்ளல் அதனினும் சிறப்புடையதாம். இதய குகையில் வீற்றிருப்பவன்தானே குகன்!

ஐப்பசி மாதத்து சுக்கிலபட்ச சஷ்டி முதல் ஓராண்டில் வரும் 24 சஷ்டிகளிலும் இவ்விரதம் அநுட்டிக்கபடவேண்டும். கந்த சஷ்டி என்று போற்றப்பெறும் ஐப்பசி சுக்கிலபட்ச சஷ்டிநன்னுளுக்கு முன் வரும் பிரதமை முதல் ஆறு நாட்களும் உமிழ்நீரும் உள்ளே விழுங்காதபடி நோன்பிருந்து இவ்விரதத்தை அநுட்டிப்பது ஒரு

WITH BEST COMPLIMENTS FROM:

**Morarji Dorman Smith**
**Private Limited**

312/313, LINGHI CHETTY STREET,
MADRAS-600 001

Phone : 24347
25788

Grams : "SHRIKIRTI"

முறை. அவ்வாறு இயலாதவர்கள் அந்நாட்களில் ஒவ்வொருமுறை ஆறு மிளகையும் ஆறு கைநீரையும் அருந்தலாம்.

உயிர் உணர்ச்சி வளர்க்கும் விரதம் இது. உண்ணாவிரதம் இருப்போர் போன்று, உப்புநீர், எலுமிச்சம்பழச்சாறு, நாரத்தம் பழச்சாறு, இளநீர் முதலியவற்றை இவ்விரதமிருப்போர் அருந்தக் கூடாது.

இவ்விரத நாட்களில் விடியற்காலையில் எழுந்திருந்து, நாட் கடன்களை முடித்து, திருநீறணிந்து முருகவேளை தியானித்துப் பின் நீராடி, தோய்த்துலர்ந்த இருஆடைகளை அணிந்து தம்பத்திலும், விம்பத்திலும், கும்பத்திலும் முருகப்பெருமானை வழிபட்டு, இரவில் நெய்யிற் சமைத்த மோதகத்தை நிவேதித்து விதிப்படிப் பூசிக்க வேண்டும். ஏழாம் நாட்காலை விதிப்படிப் பூசித்து சிவனடியார் களுடன் அமர்ந்து பாரணை செய்தல் வேண்டும். இவ்வாறு விதிக் கின்றது கந்தபுராணம் :

முந்திய வைகல் ஆதி மூவிரு நாளும் காலை
அந்தமில் புனலில் மூழ்கி ஆடை ஒர் இரண்டு தாங்கிச்
சந்தியில் கடன்கள் செய்து தம்ப விம்பங் கும்பத்தில்
கந்தனை முறையே பூசை புரிந்தனர் கங்குல் போதில்
நிறைதரு கட்டிகூட்டி நெய்யினுல் சமைக்கப்பட்ட
குறைதவிர் மோதகத்தை குமாரநாயகற்கு அருத்திப்
புறவுள விதியும் செய்து பிரான் திருப்புகழ் விளவி
உறுபுனல் சிறிது மாந்தி உபவசித்திருந்தார் மாதோ.

ஐப்பசி மாதத்துச் சுக்கிலபட்ச சஷ்டியன்று சூரன் மாண்ட நாளாகும். நமது உள்ளத்தில் வாழும்—ஆட்சி செய்யும் காமமாதி சூரபதுமாதியர்களை முருகப்பெருமானது ஞானவேலால் அழித்து ஞானவெற்றி பெற்று வாகை சூடிப்பேரின்பம் எய்தும் குறிப்பே சூரசம்ஹாரத்திருவிளையாடலின் அருட்குறிப்பாகும். அதற்குரிய ஆன்மீக விரதத்தைப் பெற உதவுவது சஷ்டி விரதமாகும். இவ்விரத மிருப்போர் பெறும்பயன் பெரும்பயனும். இதனை

......அயன் அறியா அருமறை மூலந்தெரிந்த
ஏகநாயகன் விரதம் எவரேனும் போற்றியிடில்
ஓகையால் நினைந்த எலாம் ஒல்லைதனில் பெற்றிடுவர்
மாகமேல் இமையவரும் வந்து அவரை வணங்குவரே

என்று கந்தபுராணம் சாற்றுகின்றது.

# S R V S

## SRI RAMA VILAS SERVICE LTD.

Accredited Ancillary Services Contractors to the Southern Railway for three decades

**OFFER**

1. Clearance & Forwarding Services by Rail Road or Sea
2. Shifting of machines \ equipment \ furniture from one location to another.
3. Warehousing facilities for storing of machines and Products. Recognised warehousemen for leading Banks for storing goods under hypothecation.
4. Fitment of Perkins Diesel Engines to Lorries, Vans etc.

"A Variety of Vehicles, a Variety of crew and a Variety of equipment to meet a Variety of your needs.

SRI RAMA VILAS SERVICE LIMITED,
"Dinroze Estate",
1/17 Mount Road, Madras-600 002
Telephone 83836/7/8, 81644, 83762
Telegram ROADHAUL

Our Service Starts Right from our Name





*For*

Navarathri & Deepavali Selections in

Quality Textiles at Competitive Rates

Shop at

**SRI LAKSHMI STORES**

[illegible]

SAREES SPECIALISTS

31, PYCROFTS ROAD, TRIPLICANE

**PHONE 83630**

We solicit your Patronage

இனி, விசாக விரதம் என்று ஒரு விரதம் உண்டு. முருகவேளின் திருஅவதாரத் திருநாள் வைகாசி விசாகம், விசாகவிஜயம் என்ற நூலில் இதுபற்றிய குறிப்புக்களைக் காணலாம். முருகப்பெருமானை வழிபட்டு விரதமிருப்போர் கொண்ட நியமத்தினைத் திரு முருகாற்றுப்படையில்

சீரை தைஇய உடுக்கையர்
மாசற இமைக்கும் உருவினர்
வலன் கெடு மார்பினர்
என்பு எழுந்து இயங்கும் யாக்கையர்
நண்பகல் பலவுடன் கழிந்த உண்டியர்
இகலொடு செற்றம் நீக்கிய மனத்தினர்
இடும்பை யாவதும் அறியா இயல்பினர்

என்று படம் பிடித்துக் காட்டுகின்றார் நக்கீரர்.

"பெருங்காரியம் போல்" என்று தொடங்கும் திருப்புகழில் அருணகிரிநாத சுவாமிகள் காட்டும் யாக்கை நிலையாமையை உணர்ந்தவர்கள் விரதங்களை மேற்கொண்டொழுகி ஆன்ம முதலீட்டைப் பெருக்கிக் கொள்வர் என்பது திண்ணம். கோடை நகர் திருப்புகழில் "சூழ்விரதங்கள் கடிந்த குண்டர்கள்" என்று விரதங்களை நிந்திப்போரை, சுவாமிகள் சாடுகின்றார். விரதம் மேற் கொள்ளாதவர் நிரயம் அடைவரென்றும், விரதம் அநுட்டியாத வரோடு உறவு கொள்ளற்க என்றும் வடலூர் வள்ளல் இராமலிங்க அடிகளும் நமக்கு அறிவுறுத்துகின்றார்.

ஆகவே ஆன்றோர்கள் கொண்டொழுகிய ஞானவேள்வியாம் இவ்விரதங்களை நாமும் மேற்கொண்டொழுகிப் பெற்ற இவ் வாழ்வினைப் பேரின்ப வாழ்வாக மாற்றிக் கொள்ள பன்னிரு கரத்தான் பதமலரடியிணை போற்றிச் சகல செல்வயோக மிக்கப் பெருவாழ்வில் திளைக்க முற்படுவோமாக.

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

—(கந்தரநுபூதி)

With

The

Compliments

Of

TAFE

Tractors and Farm Equipment Limited, Madras

உ

முருகா சரணம்

# பரமகுருநாதன் பதிகம்

திருப்புகழ்ச் சுவாமிகள், முருகதாச சுவாமிகள்
என வழங்கும் மஹான் வண்ணச் சரபம்
ஸ்ரீலஸ்ரீ தண்டபாணி சுவாமிகள் இயற்றியது.

## காப்பு

## வெண்பா

பருவதந்தோ ருடல் பயிலும் பரம
குருபரநா தன்பதிகங் கூறத்-தரும
முதலாகு நான்கினையு முன்னு நர்க்கு நல்கும்
பத்வா ரிசமலர்காப் பாம்.

## (இரட்டையாசிரிய விருத்தங்கள்)

சீர்கொண்ட செம்பவள வரையனைய மேனியுந்
திருநீறு பூத்த பொலிவுஞ்
சிறுசடையு முக்கண்ணு மகரகுண் டலமுலவு
செவிகளுங் குமிழ் நாசியுந்
தார்கொண்ட குமுத நிகர் கனிவாயும் வேலணி
தடந்தோள்க ளுங்கடம்புந்
தண்டுழத் திரையுமுறு செங்கைகளு மக்கமணிர்
தருமார்ப முங்கிளைசைத்
தேர்கொண்ட கோவணத் தரையுமுனி வோர் கருது
மிருபதங் களுநிலாவ
விணையின்மர கதகலப மயின்முதுகி லொருசேவை
யென்றைக்க ளிப்பாய்கொலோ
பார்கொண்ட வர்க்கிகல் செய் தொன்றுடொன்
[றெவ்வாத
பல கோடி சமயநூலும்
பரவுபிர ணவபோத சரதசகு ணவிந்தை
பரமகுரு பரநாதனே

மாறைத்தெ ழுடுமுத லாயவுல கெங்கணுநின்
மகிமையொளிர் தரவென்றனுள்
வந்துவந் தருணைப் பசுங்கிளி யெனச் சொன்ன
வார்த்தை மெய் யாகமடவார்
கூறைத்தி ரட்கொடொரு மரமேறி னுனெனக்
குவலயத் திலகிவிண்ணிற்
குளிர்மதிச் சடிலப் பிரானென விளங்கக்
கொடுத்தவர மும்பலிக்கச்
சூறைப் பெருங்காற் றிடைப்பஞ் ர்செனப்பகைஞ
தொலைதரக் கிளைஞரெல்லாந்
துயரொழிந் தானந்த வாரிதியின் மூழ்கிடத்
தொடுகின்ற தாங்கருங்கற்
பாறைக் கிணற்றினீ ருண்டாகி டச்செய்தருள்
பலகோடி சமயநூலும்
பரவுபிர ணவபோத சரதசகு ணவிநோத
பரமகுரு பரநாதனே 2

தகர்பன்றி யாதிய வனந்தஞ் செகுத்துடற்
றசையுண் டுவப் போர்களுந்
தமதுசிற் றறிவே முதற்பொரு ளெனக்கொண்டு
தடுமாறு கின்றோர்களுந்
திகழ்துங்க வேலைமலையி லைத்துதிசெ யாமருட்
சிந்தையுறு புலவோர்களுஞ்
சீரியவு பாசனை வழிச்சென் றிடாதுழ
திருட்டுத் தவத்தோர்களும்
புகழ்நன் றெனக்கருதி யாவுவு நல்காப்
பொருட்குவை படைத்தோர்களும்
புற்புதக் கொங்கைமட மங்கையர்கள் சிற்றேவல்
புரியத்து ணிந்தோர்களும்
பகர்நிந்தை யாவையு மொழித்தருள வல்லையோ
பலகோடி சமயநூலும்
பரவுபிர ணவபோத சரதசகு ணவிநோத
பரமகுரு பரநாதனே 3

இங்கடிய னேன்சிந்தை நெக்குநெக் காவுருகு
மியல்பொன் றிலாததேனு
மேகதே சத்திலொரு சிறிதிளக லுண்டதுவு
மென்செய லெனத்தேர் கிலேன்
மங்களமி குந்தமிழ்க் கவிவலிய வந்துனை
வழுத்தச்செய் கின்றநீயென்
மனவெளி நடுச்சொன்ன வார்த்தைக ளனைத்துமுழு
வம்பென விளங்கலாமோ
சங்கடம லிந்தொரு கருங்கற் கிணற்றூற்
றளர்ந்திடச் செய்தன்முறையோ
சாற்றிய படிக்குநீ ருற்றுவர வருளியிரு
சரணமலர் சூட்டியாள்வாய்
பங்கயன் மறைத்தொகை விதித்தவை முதற்குலவு
பலகோடி சமயநூலும்
பரவுபிர ணவபோத சரதசகு ணவிநோத
பரமகுரு பரநாதனே 4

என்னகத் தினும்வலிய தன்றிக் கருங்கலுன
தின்னருட் பொலிவதனிலு
மேற்றமன் றதனுள்வரு நீரூற் றெனக்கருதி
யிளையாது முயலுகின்றே
னின்னவித மறியார் தடுத்துப் படுத்துதுய
ரெல்லாமு மறிலாயோ
வீகின்ற தாச்சொன்ன படிபொருள் கொடாதுகட
னேறச்செய் கின்றதியல்போ
மன்னரா தியரையொரு துணையா மதித்தவர்கள்
வாழ்வினுந் தாழ்வெய்தினேன்
மாயையுனை யன்றியுள தென்பவர்கள் சொற்படிநின்
வடிவுகு னியமாகுமோ
பன்னரிய விளையாடல் பயிலுமெய்க் கடவுளே
பலகோடி சமயநூலும்
பரவுபிர ணவபோத சரதசகு ணவிநோத
பரமகுரு பரநாதனே 5

சேவலங் கொடியே செயஞ்செய மெனச் சொன்ன
    தீரந்தனைக் குறுக்கித்
திருவேட முள்ளார் பெரும்படை நடுக்குலவு
    செல்வத் தினைப்பிரித்துக்
காவகத் திந்திரர்கள் வாழ்வையும் வெறுத்துள்ள
    கனமகிமை யினைமறைத்துக்
காயத்தை யான்மா வெனக்கருது மூடரிற்
    கண்கலங் கப்படுத்திக்
சேவல மெனப்பலரு நிந்தித் திடக்கலிற்
    கிணறொன்று வெட்டவிட்டுக்
கிள்ளையென நீசொன்ன நன்மொழிபுன் மொழியெனக்
    கெடுமாறு செய்யு மென்றன்
பாவமு மூமையு மொழுத்திட வல்லையல்லையோ
    பலகோடி சமயநூலும்
பரவுபிர ணவபோத சரதசகு ணவினோத
    பரமகுரு பரநாதனே 6

வாதவூ ரானுக் குரைத்தபடி செய்யாது
    வையையாற் றிடைநிறைந்த
மணலினடு வெயிலிலடி படவிடுத் தானுதவு
    மதலையாய் வாமநெறியோர்க்
காதர மெனக்குலவு மம்பிகை முலைப்பா
    லருந்தியொரு குருடனேசற்
கார்வமெய் தியகரிக் கொருதுணைவ னாகியெழி
    லாயர்பா டியில்வெண் ணெயாற்
போதவடி யுண்டவற் கருமைமரு மகனாக
    புந்தியை விளக்கவென்றே
போற்றுமென் கற்கிணற் றூற்றுவர வொட்டாது
    போரொடு கின்றுயிதோர்
பாதகங் காணினி திரங்கிரங் கையகோ
    பலகோடி சமயநூலும்
பரவுபிர ணவபோத சரதசகு ணவினோத
    பரமகுரு பரநாதனே 7

காழியம் பதியில்வரு கவுணியர் கன்றருட்
கலையொன் றளித்துவந்தாய்
கனவினிலு மறவாத காரிகைக் கறுபட்ட
கைகொடுத் துக்களித்தா
யேழிழைச் சுருதிநிகர் பனுவல்பகர் புலவற்
கிடுக்கணுறு சிறைதவிர்த்தா
யெரிசுரத் தேகியொரு பாவலன் மிசைப்பாடி
யேதமுறு கவிதையேற்றாய்
வாழிய திருப்புகழ் தொடுக்குமொரு கிள்ளையை
வலத்தோளின் மிசையமைத்தாய்
மற்றுமள வறுதொண்ட ருக்கருள் சுரந்தாயென்
மட்டினு மிரங்காய் கொலோ
பாழியந் தகரேறி யுலகைவலம் வருகுகா
பலகோடி சமயநூலும்
பரவுபிர ணவபோத சரதசகு ணவினோத
பரமகுரு பரநாதனே 8

அட்டதிக் கிற்றலைவ ரும்பிரமன் மாயனு
மடங்கிடப் பொருதுவென்ற
வானையொரு குன்றோடு பொடிப்பட முனிந்துசிலை
யாயிரத் தம்புமாரி
கொட்டவல கோளரி முகத்தனை யதட்டியொன்
குலிசத்தி னுற்செகுத்துக்
குரைகடலினிடையெழுந் தண்டமிசை நீடிருட்
கொக்கறச் செற்ற திண்டோட்
கிட்டவிர் மதாணிமுத லாயபணி யின்றொகை
யியற்றமிழ்க் கிணையாகுமோ
வென்னவித மோபுலவர் தன்மைநீ மிடியா
விடர்ப்பட விடுத்தல் சொல்லாய்
பட்டமணி நெற்றியங் குஞ்சரிம ணாளனே
பலகோடி சமயநூலும்
பரமபிர ணவபோத சரதசகு ணவினோத
பரமகுரு பரநாதனே. 9

ஞாலமுமு தும்பலச ராசர வுயிர்த்தொகையு
நல்குகர மெட்டுள்ள தோர்
நான்முக னழப்புடைத் துச்சிறையில் வைத்ததிலு
நாரண னுவக்கும் வண்ணங்
காலனும்வெ ருண்டுபணி தாருக னணிந்தவிர்
கழுத்தாழி நல்கியதிலுங்
கறைமிடற் றுத்தம்பி ரான்வணங் கப்பொருவில்
கருணையுப தேசநவிலுங்
கோலமொடு நின்றதிலு மென்மனம் பொருவுகற்
கூபத்தின் ஞானமன்ன
குளிர்நீர் வருத்தலரி தாகுமெனி லுனதுபுகழ்
குன்றுமென லறியாய் கொலோ
பாலனைய நீறணிப வர்க்கொருச காயனே
பலகோடி சமயநூலும்
பரவுபிர ணவபோத சரதசகு ணவினோத
பரமகுரு பரநாதனே. 10

கண்ணாயி ரங்குலவு தோகைநெடு நீழலுறு
கனகமா மயிலின் முதுகிற்
கதிர்வே லுடன்கருது மெனதுசிந் தைக்கினிய
காட்சிதந் தருளியப்பான்
மண்ணாதி யாநுவலு மேடனைத் துன்பங்கள்
வருகின்ற வழியடைத்து
மறையாக மத்துநெறி வழுவாத மைக்குமுயர்
வல்லபத் தினையளித்துத்
தண்ணார் கடம்பனைய கவிமாலை யாவையுஞ்
சாற்றப் பணித்து மற்றோர்
சடமெடுத் துழலாத முத்தியிற் புகுமாறு
தனியிலை விபூதியருள்வாய்
பண்ணார் குறிச்சிதொறு நடமாடு முருகனே
பலகோடி சமயநூலும்
பரவுபிர ணவபோத சரதசகு ணவினோத
பரமகுரு பரநாதனே 11

தாழாத பரசமய வீறழிந் தருணெறிச்
சமயங்க ளாறுமுய்யச்
சலதிமுத லாயபுன லிற்கனலில் விட்டுள்ள
தமிழ்வகை யெலாம் விளங்கக்
காழார்ம ரம்பொருவு நெஞ்சுடைக் கயவர்முற்
கவிவாணர் சென்றிரக்குங்
கனகொடுமை யுலகைவிட் டொழியமுனி வரர்குழாங்
களிகூர நனிவிரும்பி
யேழாவ தாயசம ரசநிலையி னின்றிரந்
தெய்க்கின்ற தமியனேனுள்
ளெண்ணரிய வடிவத்தொ டுற்றுநீசொன்னமொழி
யெல்லாநி சப்படாமற்
பாழாகு மோவென வருந்தலுற் றேனருள்செய்
பலகோடி சமயநூலும்
பரவுபிர ணவபோத சரதசகு ணவிநோத
பரமகுரு பரநாதனே 12

---

## ஸ்ரீமாம்பழக்கவிச்சிங்க நாவலரவர்கள்

இயற்றியவை

## ஸ்ரீவிநாயகர் பதிகம்

சீர்கொண்ட கிரணசந் திரசடா மகுடமுந்
திரியம்ப காம்போஜமுந்
திடகரட கடவிகட ஜயகும்ப கெம்பீர
திவ்யகுஞ் சரவதனமுந்
தார்கொண்ட பரிமள சதுர்ப்புய விலாசமுந்
தரளவெக் ஞோபவீத
தடமார்ப லம்போ தரப்ரவா கமுமுசித
தவளாம்ப ரானந்தமுங்

கூர்கொண்ட பாசாங் குசாஸ்தமுங் கிண்கிணி
குலுங்குபத முங்கண்டியான்
கும்பிட் டிறைஞ்சவருள் கூர்ந்துதவ வேண்டுநய
குணசகல பரிபூரண
வார்கொண்ட களபதன வல்லபை மனோகரா
வளமுறுந் துறைசுடோறு
மருவுபிர ணவவேத சொருபசம ரசநீத
வரதசிவ கணநாதனே

## சரசுவதி அம்மன் பஞ்சரத்னம்

சீர்கொண்ட செம்பொற் சிலம்பிசை ததும்புனது
சீததள வனச பாத
தெரிசன மெனக்கரு தினம்கொடுத் தெண்ணியவை
சித்தியாம் படிமுடித்துக்
கார்கொண்ட கனபருவ காலமுகில் போலமுதிர்
கவிதைமழை தடைபடாமற்
கனிவினொடு பொழியவென் வாக்கினிற் குடிவந்து
கருணைநீ புரிதல் வேண்டும்
பார்கொண்ட ஜீவபரி பாலன குணலைப்ர
பாகரா னந்த வடிவே
பலதேவ கணவிநுத படிகரத் னபரண
பரிமள விநோத வமுதே
நார்கொண்ட வடியர்மன நடனமயிலே பிரம
னுவீற்றிருந்த குயிலே
நாதஷட் பதவேணி வேதபுந் தகபாணி
ஞானமுத் தமிழ்வாணியே

## பழநிப் பதிகம்

மணிகொண்ட கனகதட மகுடபந் தியமெழில்
வயங்கு ஷண்முக கமலமும்
வளர்கருணை பொழிவிழியு மிளநகையு முதுமறையின்
மதுவொழுகு குமுதவாயுந்

திணிகொண்ட பனிரண்டு தோளுமென் ளுளுஞ்
 சிலம்பொலி யலம்புதாளுந்
திரள்புனித கரமுமக லுரமுமிடு கவசமுஞ்
 சேவற் பெருந்துவசமுங்
கணிகொண்ட வயிலுநட மயிலுமணிவெயிலுமிரு
 கன்னியர்க டுன்னுமொயிலுங்
கண்டுமென மண்டுதுயர் விண்டுனது தொண்டுநான்
 கனிவினொடு பணியவருள்வாய்
பணிகொண்ட கண்டகர் பயங்கொண்ட வண்டரைப்
 பரிவுகொண் டாண்டதேவே
பழகுமங் களகித முழவுகண் டுயிலாத
 பழநியம் பதிநாதனே

## குமரகுரு பதிகம்

பற்பல கதிர்த்திர ளெனப்பரு மணிச்சுடர்
 பரப்புமகு டத்தினழகும்
பத்தர்மகி ழக்கருணை வைத்தினிது பார்க்கின்ற
 பத்மநய னத்தினழகும்
உற்பன மறைப்பொருளை நற்றமிழ் முனிக்குமு
 னுணர்த்துசெய் வாயினழகும்
ஒழுகமிர்த நயகிரண முழுமதியு மனநாணு
 மோராறு வதனவழகும்
பொற்பருவ தத்தினைநி கர்த்துவளர் பன்னிரு
 புயத்தினழ குந்துலங்கிப்
பொங்குவெண் ணீற்றினழகுங்கண்டு தமியேன்
 புகழ்ந்துதொழ வரமுதவுவாய்
சிற்பரச தானந்த நிட்களநி ராலம்ப
 தெய்வசுக பரிபூரணா
செயமிகுத் துலவுதிரு மயில்வயப் பரியில்வரு
 சிவகிரிக் குமரகுருவே.

# பழனுபுரி மாலை

எத்தனை விந்தைக ளோவடி யார்பொருட் டேவிளைத்து
மூத்தல முந்தொழ நின்றோய்க்கென் னெண்ண முடிப்
[பரிதோ
சித்த மிரங்கி யருள்செஞ் சடைக்குள் வெண்டிங்கள்
புனை
யத்தர் தரும்புதல் வாபழ னுபுரி யாண்டவனே 1

உன்னை யலான்மற் றொருபெருந் தெய்வ முணர்ந்
திலன்யா
னென்னை விடேலுனக் காளாக்கிக் கொள்வதி லென்ன
தடை
முன்னை விரோத முளதோ பொறைநின் முறைசிறியேற்
கன்னை பிதாகுரு நீபழ னுபுரி யாண்டவனே 2

சராசர சிவ தயாநிதி நீயிச் சமையமென்முன்
வராவிடில் யானினி யாரை நினைத்து வரம்பெறுவேன்
குராவடி வேல குழந்தைக் குமர குருமணிச் சூட்
டராவணை மால்பர வும்பழ னுபுரி யாண்டவனே 3

உனது திருநா மங்கள்சில வுரைப்பேன் வாயா லுருகு
கிலேன்
மனம தனையோர் வழிநிறுத்த மாட்டே னெவ்
வகையுய்வேன்
றினமு மெனைநீ திருத்தியிடர் தீர்த்துக் கருணை செயல்
வேண்டும்
பனக ரிமையோர் பணிந்துதொழும் பழனிக்குமரப்
பெருமானே
நீளுங் கதிர்வடி வேலு மயிலுநன் னீபவரைத்
தோளுங் கமல முகமு மிரண்டுஞ் சுகந்த வெட்சித்
தாளுங் கவினு மிலங்கவந் தன்பர் தமைத்திருத்தி
யாளுங் குகவர தாவடி யேனின டைக்கலமே

## திருச்செந்தூர் சந்தவிருத்தம்

### தொட்டிக்கலை மதுரகவி ஸ்ரீ சுப்ரமண்ய முனிவர்

கள்ளமே புரிகின்ற நெறியனே
கல்வி கேள்வியு மொன்று மறியேனே
உள்ள மேலுனை யென்று முணர்வாலே
உள்ள மேலுல கென்பர் பெரியோரே
வெள்ளிமால் வரை யெந்தை செவியூடே
விள்ளொணு மாறை விண்ட கனிவாயா
வள்ளி யோரினு மிஞ்சு கொடையானே
வள்ளி நாயக செந்தின் முருகோனே 1

நமோ நம கந்த வெனவு
நாமேல் நாடாவிய மந்திரமறியேனே
சமாதிபொருந்திட நினையேனே
தயாபரனின் சரணடைவேனே
உமாபதி தந்தருள் புதல்வோனே
உலாவி நடம்புரி மயில்வாழ்வே
குமார கடம்பணி குகவேளே
குணதர செந்தினில் முருகோனே 2

## ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசாமி திருவருட்பா

### ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக பரமாசாரிய சுவாமிகள்

மதிவதனம் ஆட இரு காதின்நவ ரத்னமணி
மகரகுண் டலமாட நாள்
மலர்புண்ட ரீகவிழியாட அருளாடமன
மகிழ்மந்த காசமாடக்
கதிருதயம் ஆயிரம் கோடியென வேயிலகு
காருண்ய மேனி யாடக்
கனவஜ்ர புயவலயம் ஆடவண் டாடக்
கடப்ப மலர் மாலையாட
விதமணி இழைத்தபரி புரமாடு சரணார
விந்தங்களாட நீள்கை
வெற்றிவேல் ஆடமயில் ஆடஎன் கண்முன்நீ
விளையாட வோடி வருவாய்

முதுமறைகள் ஆகம முழுங்கு புள்ளூரனே
முக்கட் குருக்கள் குருவே
முத்தர்குரு வேயோக சித்தர்குருவே பால
முத்துக் குமார குருவே 1

எள்ளளவில் ஆயிரத் தொன்றளவு பத்திஉன்
இணையடியில் வைத்த பேர்கட்கு
இந்த்ராதி பதமும்உயர் சந்த்ர சூரியர்பதமும்
இமையவர்கள் அரியபதமும்
தெள்ளுபுகழ் நான்முகக் கடவுள் பதமும்நெடிய
செங்கண்மால் பதமும் எல்லாச்
செல்வமும் வருமென்று சொல்லவும் கேட்டும் உன்
திருவடிக் கன்பிலாத
கள்ளமா னிடரை யொரு காசும் பெறுதசீக்
கந்தையென் றேவிட்டுநான்
கற்றமெய் யடியவர்கள் குற்றேவல் செய்யக்
கடாட்சம் வைத்து அருள்வேலவா
முள்ளுடைய தாள்முளரி கள்ளுதவு புள்ளூர
முக்கட் குருக்கள் குருவே
முத்தர்குரு வேயோக சித்தர் குருவே பால
முத்துக் குமார குருவே 2

## ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி ஊசல்

**(மகாமகோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாதய்யர்)**

திருகாற்று மொருபூதத் தெவ்வை மாய்ப்பச்
சிறந்திடுநற் கீரனுர் செப்புமொப்பில்
முருகாற்றுப் படையொருபா லன்பர்பாட
முன்னரிய சந்தவகை மொழிந்தே யுள்ளம்
உருகாற்றும் அருணகிரி நாதரன்பின்
ஓதுதிருப் புகழொருபா லன்பர் பாடக்
குறுகாற்று மிலஞ்சிசுலா மிலந்தை முத்துக்
குமாரசுகு மாரரே ஆடிரூசல்

# கர்நாடக மாநில ஸ்தல யாத்திரை

## (T. S. வாசுதேவன், தலைவர்)

இரண்டு ஆண்டுகளாக வகுக்கப்பெற்ற இந்த யாத்திரை திருத்தணிகேசன் அருளால் இந்த ஆண்டு செப்டம்பர் மீ 19 திங்கள் இரவு 8-30 அளவில் திருவல்லிக்கேணி, பெரியதெரு ஸ்ரீ அரசடி கற்பக விநாயகர் சந்நிதியிலிருந்து வழிபாடு செய்து துவக்கப் பெற்றது. சென்னையில் பல பகுதியிலிருந்த மற்ற அடியார்கள் சென்ட்ரல் ரயில் நிலையத்திற்கு வந்து குழுமினார்கள். பெங்களூர் மெயிலில் யாத்திரை துவங்கியது.

20ந் தேதி செவ்வாய் காலை 5-30 அளவில் பெங்களூர் சிடி வந்து சேர்ந்தோம். அங்கிருந்து யாத்திரையைத் தொடர ஏற்பாடு செய்யப்பட்ட டூரிஸ்டு பஸ்ஸில் ராஜாஜி நகரிலுள்ள தாஸாச்ரமம் சென்றோம். அங்கு காலைக்கடன்களை முடித்து சிற்றுண்டிக்குப் பின் அங்குள்ள மிகுந்த சாந்தமான பஜனைக் கூடத்தில் இறைவனைப் பாடினோம். அருகிலிருந்த ஸ்ரீ அனந்த பத்மநாபர், ஸ்ரீவெங்கடாசயபதி சன்னிதிகளை வணங்கி பின் விஸ்வேச்வரபுரத்தில் அமைந்த ஸ்ரீசுப்ரமண்ய சுவாமி, ஸ்ரீசத்யநாராயணர், ஸ்ரீவெங்கடாசலபதி, ஸ்ரீகன்னிகா பரமேஸ்வரி ஆலயங்களில் தரிசனம் செய்தோம். ஸ்ரீகன்னிகா பரமேஸ்வரி கோயிலில் நிர்வாகிகள் அளித்த வரவேற்பும், அன்பும் மறக்க இயலாது. அம்மனின் தரிசனம் கண்ணைவிட்டு நீங்காதவொன்று.

பின் பசவங்குடி ஸ்ரீவித்யாகணபதி, ஒரே கல்லில் ஆன பெரிய நந்தி தரிசனத்திற்குப்பின் பகல் உணவு முடித்து மைசூருக்குக் கிளம்பினோம். அழகான மலைப்பாதையில் சாமுண்டி குன்றும் அங்கே அஷ்டபுஜ மஹிஷாசுர மர்த்தினியின் நின்ற கோலத்தை தரிசித்தோம். மெர்காரா சென்

WITH BEST COMPLIMENTS FROM:

**SRI RAMA VILAS SERVICE LIMITED**

**KUMBAKONAM**

Coach Builders, Automobile Specialists

DEALERS for Perkins Automotive Engines for the Districts of Thanjavur, Trichy, Pudukkottai, South Arcot, North Arcot, and Salem

MAIN DEALERS For MASSEY FERGUSON TRACTORS for the districts of Thanjavur, Trichy and Pudukkottai

**"SERVICE IS OUR MOTTO"**

Phone: 266, 268 and 1068 Grams "Ramavilas"

*WITH BEST COMPLIMENTS OF*

**The Eagle Engineering**

Repairing and overhauling of Filter Equipments and General Order Suppliers.

51-A, S. P. MUKHERJEE ROAD
ROOM NO. 6
CALCUTTA-700 026

லும் வழியில் ஜகன்மோகன் கலைக்கூடம், அரண்மனை கட்டிடங்களை பஸ்ஸிலிருந்தே கண்டு மகிழ்ந்து இரவு 9மணியளவில் மெர்காரா அடைந்தோம்.

21-ம் தேதி புதன் காலை சிற்றுண்டிக்குப்பின் பாகமண்டலாவுக்கு கிளம்பினோம். மேற்குத் தொடர்ச்சி மலையில் காப்பி கொட்டை, ஏலக்காய், கஸ்தூரிமஞ்சள் தோட்டங்கள், அழகான மலர்கள், சலசலக்கும் அருவிகள் ஆகியவைகளிடையே அமைந்த பாதையில் பஸ்சென்று காலை 9-30 அளவில் காவேரியில் கனகாவும், ஸுஜோதிஷ் (அந்தர் வாஹினி) சங்கமம் ஆகும் அவ்விடத்தில் பளிங்குபோன்ற நீரில் வேதவிற்பன்னர் ஸ்ரீசுந்தரம் சங்கல்பம் செய்துவைக்க ஆனந்தமாக ஸ்நாநம் செய்தோம். பின் பாகமண்டலேஸ்வரரை தரிசித்து 7 கிலோ மீட்டர்கள் சென்று 3000 அடி உயரத்தில் இருந்த தலைக்காவேரியை அடைந்தோம் அங்கு காவேரிகுண்டம்—எதிர்குளத்தில் ஸ்நாநம் செய்த பிறகு அகஸ்தியரால் ஸ்தாபிக்கப் பெற்ற லிங்கத்தை தரிசித்து திரும்பவும் மெர்காரா அடைந்து பகல் உணவிற்குப் பின் மாலை 7 மணியளவில் சுப்ரமண்யாவை அடைந்தோம். அங்கு ஆறுமுகப் பெருமான், ஆதிசேஷன் - வாசுகியின்மேல் மயில் வாகனத்தில் ஜகஜ்ஜோதியாக விளக்குகள் நடுவே காட்சியளிக்கிறார். எதிரில் 20 அடி உயரத்தில் காருட மந்திரம் பொறிக்கப்பட்ட கருடஸ்தம்பம் உள்ளது. எல்லாவிதமான ஸர்ப்ப தோஷங்களும் இங்கே விலகும். இரவு 8 மணியளவில் மஹா பூசை நடந்தது. வடகிழக்கு பக்கத்தில் உமாமஹேச்வரர் சன்னிதியுள்ளது. மற்றும் சூரியன், கணபதி, விஷ்ணு, அம்பிகை சன்னிதிகளும், கருவறைக்குப்பின் கூடை வடிவில் (குக்கே) லிங்கமும் அமைந்துள்ளது. பொரி, விபூதி, புற்றுமண் போன்ற பிரசாங்களைப் பெற்று இரவு உணவுக்குப்பின் ஒய்வு கொண்டோம்.

22ந்தேதி வியாழன் காலை குமாரதாரா நதியிலும் பின் ஒருமைலில் தர்பணு நதியிலும் ஸ்நாநம் செய்து ஆதி சுப்ர

WITH BEST COMPLIMENTS
FROM:

**Madras Engineering Company**

*Specialists in*

Rewinding Of Motors & Repairs Of Electrical, Mechanical Instruments.

62/1, Mowbrays Road, Alwarpet,
MADRAS-600018

*With best compliments from*

**SPEED-A-WAY LIMITED**

Parts and Components
Marketing Specialists

35/5, Anna Road, Madras-600 002
(Phones: 83265/83266)

*Branches at:*

J. C. Road, Bangalore-560 002
Prakasam Road, Vijayawada-520 002
Banerji Road, Ernakulam, Cochin-682 018.

*Calcutta office:* 55B, Mirza Ghalib Street,
Calcutta-700 016

மண்யாவை தரிசித்தோம். இங்கு புற்றுதான் சந்நிதி. புற்று மண் பிரசாதம் பாம்புக்கடிக்கு மருந்தாம். பின் அங்கிருந்து தர்மஸ்தலாவிற்குச் புறப்பட்டோம். வழியில் நேத்ராவதி யாற்றில் ப்ரோக்ஷணம் செய்து கொண்டு பகல் 12 மணி உச்சி கால பூஜைக்கு ஸ்ரீ மஞ்சு நாதர் (அம்மவாரு-அன்னப்பவாரு) சந்நிதியில் நிர்வாக அதிகாரிகள் உதவியால் விசேஷ தரிசனம் செய்தோம். பின் கண்ணாடி வளிகை, வரவேற்பு மண்டபம், கலைக்கூடம், அன்னசாலை ஆகியவைகளைக் கண்டோம் சுமார் 3000 பேர்களுக்கு இரண்டு வேளையும் (ஊரிலுள்ள பள்ளி மாணவ மாணவிகள் உள்பட) அன்னமளிக்கிறார்கள். அது கண் கொள்ளாக்காட்சி. கற்பனை செய்ய இயலாதது. அருகாமை யில் மஹாவீரரின் (கோமடேச்வரர்) சிலைகள் பல இடங்களில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. பகல் உணவிற்குப் பின் உடுப்பியை நோக்கி பயணமானேம்.

உடுப்பிக்கு மாலை 6.30க்கு வந்தடைந்தோம். அங்குள்ள மத்வ புஷ்கர்ணியில் ஸந்தியாவந்தனம் முடித்து கோயிலி னுள்ளே பலகணிமூலம் ஸ்ரீகிருஷ்ணனை தரிசனம் செய்தோம். சந்நிதியின் எதிரில் 'சந்த்ரசாலா' என்ற மண்டபத்தின் சுற்றுப் புறச் சுவர்களில் கண்ணைக்கவரும்வண்ணம் தீட்டியுள்ள ஸ்ரீகிருஷ்ண லீலைகளின் ஓவியங்களைக் கண்டோம். அஷ்டபதி பஜனைக்குப்பின் 8 மணியளவில் பாலிமார் மடாதிபதி சுவர் கள் அவரது இரண்டு சிஷ்யர்களுடன் (15,16 வயதில் தேஜஸ்வி களான பால சந்யாசிகள்) அங்கு மஹாபூஜை செய்தார்கள். ஒருகையில் மத்தும் மற்றெரு கையில் கயிறும் உடைய அந்த சிறு குழந்தை கோபாலனை பார்த்துக் கொண்டேயிருக்கலாம். ஸ்ரீமத் மத்வரால் ஸ்தாபனம் செய்யப்பெற்றது பிராகாரத் தில் உடுப்பி சுப்ரமண்யர் சன்னிதியில் வழிபாடு செய்து இரவு உணவிற்குப் பின் ஓய்வு கொண்டோம்.

மறுநாள் 29ந்தேதி வெள்ளிக்கிழமை காலை புஷ்கரணியில் ஸ்நானம் செய்து நிர்மால்யதரிசனம், விஸ்வரூப தரிசனம் செய்து சம்பிரதாய பஜனைக்கு பின் அபிஷேகம் தீபாராதனை

With the best compliments of

INDIA PISTONS LIMITED

SEMBIUM, MADRAS-600 011

The largest manufacturer

of

Pistons, Piston Rings, Cylinder

Liners, Circlips & Gudgeon Pins

in

SOUTH EAST ASIA

கண்டுகளித்து சந்திரமௌளிஸ்வரர் (சுயம்பு). விக்னேஸ்வரர், அனந்தசயனர், ஸ்ரீராகவேந்திரமடம் தரிசனத்திற்குப்பின் கொல்லூர் பயணமானோம். வழியில் பிலத்திற்குள் கோடிலிங் கங்கள் தரிசனம் செய்தோம். கொல்லூர் மூகாம்பிகை பத்மா சனத்தில் சங்குசக்கரத்துடன் அபயவரத கரங்களுடன் மாணிக் கம், மரகதம் வைரம், தங்கம் முதலான ஆபரணங்களின் நடுவே ஒரே கல்லில் மரகதப் பதக்கமும் பூண்டு சிம்மவாஹன த்தில் வீற்றிருக்கிறாள். கீழே ஸ்ரீ ஆதிசங்கரரால் பிரதிஷ்டை செய்த ஜியோதிர்லிங்கம் உள்ளது. அதில் சன்னதி மூலம் சூரியனின் கிரணங்களைப் பாய்ச்சி தங்கரேகை தரிசனம் செய் தோம். பிரகாரத்தில் ஸ்ரீ ஆதிசங்கரர் தியான மண்டபமும் அவர் சுமர்ந்த பீடமும் உள்ளது. ஸரஸ்வதி மண்டபத்தில் அம்பாளைப் பாடினோம். பகல் உணவிற்குப்பின் அங்கிருந்து கிளம்பி மாலை 6-45க்கு கோகர்ணம் அடைந்தோம். மஹா கணபதி கோயில், மஹாபலேஸ்வரர் கோயில் ஆகியவை வழிபாடு செய்து ஓய்வு பெற்றோம். மறுநாள் 24 சனிக்கிழமை காலை ரத்னகரம்—ஸமுத்ர ஸ்நாநமும் பின் கோடிதீர்தமாகிய பெரிய குளத்தில் ஸ்நானமும் செய்தோம். ராவணேஸ்வரன் ஆத்மலிங்க ஸ்தாபன காரணமாக குட்டுப்பட்ட மஹாகண பதி (4 அடி உயரமுள்ளார்)யின் ஆனந்தமான அபிஷேகம் அடியார்களை மெய்மறந்து கதற அடித்து விட்டது. பின் மஹாபலேஸ்வரருக்கு ருத்ரம் சமக பூர்வமாக மகாபிஷேக மும் அர்ச்சனையும் பக்தர்களே செய்தார்கள். ஆத்மலிங்கத் தின் சிரசில்தான் பசுவின் காது (கோகர்ணம்) வடிவிலுள்ள பள்ளம் உள்ளது. வடக்குப் பிராகாரத்தில் ஆதி கோகர்ணம் என்ற பெரிய சிவலிங்கம் உள்ளது. தலபுராணப் படி சிவபெருமான் பூதேவியின் காதின் வழியாக நுழைந்து வெளிவந்தாராம். மற்றும் வீரபத்ரர், தத்தாத்ரேயர், பார்வதி, காசிவிஸ்வநாதர், விசாலாக்ஷி ஸந்நிதிகளைத் தரி சித்து 9-45 அளவில் சிருங்கேரிக்குப்புறப்பட்டோம். வழியில் அன்றுமாலை ஜோக் நீர்வீழ்ச்சியின் அழகைக் கண்டு வியந்து. ஷராவதி, லிங்கமகி முதலிய அணைகளையும் பார்த்து இரவு 8 மணியளவில் சிருங்கேரிக்கு வந்து சேர்ந்தோம். ஸ்ரீசாரதாம்

*With best compliments from*

## SRI YOGAM AUTOMOBILES

Dealers in

MOTOR PARTS & ACCESSORIES

**United Building**

**No 10, General Patters Road**

**MOUNT ROAD, MADRAS-600 002**

Phone : 810220 & 85484

*WITH BEST COMPLIMENTS FROM :-*

# Easwary Lodge

**"AT EASWARY BUILDINGS"**

7, Tana Street, Purasawakkam,

MADRAS-600007

WELL FURNISHED ROOMS

AT MODERATE RATES

*Phone : 661429* *ESTD : 1947*

பாளின் திவ்யதரிசனமும் வெள்ளித் தேர்விழாவும் மனத்தை உருக்கும் நிகழ்ச்சிகள். வெளியில் வித்யாரண்யர் கோயிலும், விஜயநகர சிற்பி ஜக்கண்ணுவினுல் உருவாக்கப்பட்ட அற்புதமான ரத உருவில் அமைந்த மண்டபத்தையும் கண்டோம். அதில் ஸ்ரீசக்ர மஹாமேருவடிவிலான அமைப்பில் மத்தியில் சுற்றி 12 தூண்களும், 12 ராசிகளின் சிற்பங்களும் கீழ்வாயில் வழியாக உதயசூரியனின் கதிர்கள் ஒவ்வொருமாதத்தில் அதில் விழும்படியான அமைப்புடன் கட்டப்பட்டுள்ளது. மற்றும் சிவன், பார்வதி, பிரும்மா, கணபதி லக்ஷ்மி நாராயணர், கருடன் ஆஞ்சநேயருடன் கூடிய கிருஷ்ணன் முதலியசந்நிதிகளையும் கண்டோம்.

மறுநாள் 25 சனிக்கிழமை காலை துங்கா நதியில் பயங்கரமான சுழல்கள் நடுவே நிதானமாக ஸ்நாநம் செய்தோம். நதிக்கரையில் கர்ப்பிணியர்ன தவளைக்கு கருநாகம் குடைபிடிக்கும் சிற்பம் உள்ளது. இது ஸ்ரீ ஆதிசங்கரரை மிகவும் கவர்ந்ததாம். பிறகு அம்பாளை தரிசனம் செய்து தோணியின் மூலமாக நதியைக் கடந்து தபோவனம் அடைந்தோம். அங்கே ஸ்ரீ நரசிம்மபாரதி சுவாமிகள், ஸ்ரீ சந்திர சேகர பாரதி சுவாமிகள் அதிஷ்டானம் கண்டோம். மிக்க ரமணியமான, நிர்மலமான ஆச்ரமம். பகலுணவிற்குப்பின் மடத்தின் மானேஜர், உள்ளத்தில் குழந்தையான அந்த 'தாத்தா' மிகுந்த உபசரணையுடன் வழிக்கு சித்ரான்னம் தயார் செய்து கொடுத்தார். அங்கிருந்து கிளம்பி மாலை 6-45க்கு பெங்களூர் வந்தடைந்தோம்.

பெங்களூர்மெயிலில் கிளம்பி மறுநாள் காலை சென்னை அடைந்தோம். இந்த சிறந்த யாத்திரை மறக்க ஒண்ணுத வகையில் அமைத்துத்தந்த முருகப் பெருமானுக்கும், இரவு பகலாக உழைத்த அன்பர்களுக்கும் யாத்திரையில் காலந் தாழ்த்தாது எல்லாம் திட்டமிட்டபடி உதவிய டூரிஸ்டு பஸ் டிரைவர் முஸ்லிம் அன்பருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிரும்.

---

*With the Best Compliments From :*

*THE WHEEL & RIM COMPANY OF INDIA LIMITED*

Huzur Gardens, Sembiam,
Madras-11

*MANUFACTURERS OF :-*

Famous "Jubilee" Bicycle-rims/Rickshaw Rims.

**பக்திவயல்** **ரூ. 7-00**

—திரு. S. Y. கிருஷ்ணசாமி, I.C.S. (Retd)

ஸ்ரீ தியாகராஜஸ்வாமி கீர்த்தனைகள். ரூ 22-00
புதிய மூன்றும் பதிப்பு
தமிழில் மொழி பெயர்த்தது
ஸ்ரீ T. S. பார்த்தசாரதி

**ஹிக்கின் பாதம்ஸ் லிமிடெட்**
**165, அண்ணாசாலை, சென்னை-2**

**கிளைகள் :** டெல்லி, கல்கத்தா, பெங்களூர், மைசூர், மங்களூர், ஹைதராபாத், திருவனந்தபுரம், எர்ணாகுளம், உதகமண்டலம், மதுரை, கோயம்புத்தூர், திருச்சி.

# Electric Transformer and Equipment Company Limited

*B 29-30, INDUSTRIAL ESTATE,*
*SANAT NAGAR*
*HYDERABAD-500018*

Power and Distribution Transformers
5000 KVA-33000 Volts

Transformer-Rectifier units
12 KV-30,000 Amps D. C.

**Supply Voltage Correction Equipment**
**15 MVA Loads**

High Voltage and High Current
150,000 Volts-10,000 Amps
Testing Transformers

**Sole Selling Agents,**

ELECTRIC AND GENERAL EQUIPMENT
COMPANY
1-11-89, Begumpet, Hyderabad-500016.

Telex: ELEQUIP 015-228 Phones: 75155
72033

உ

முருகா சரணம்

# வாழ்த்து

பரிவு பொருட் சுவை தாளம்
பரவு திருப் புகழ் பாட
அருணகிரிக் கருள்வோய் நின்
அடிதொழவைத் தெனே யாள்வாய்
முருகனருட் சபை வாழ்வே!
முதுமறை மெய்ப் பொருளானோய்
திருபுரை பெற் றருள் சேயே
திகழ் தணிகைப் பெருமாளே

— ஈ. வே. வேங்கடசுப்ரமண்யம்

★

துய்யதாம் மறைகளாலுந் துதித்திடற் கரிய செவ்வேள்
செய்யபே ரடிகள் வாழ்க சேவலும் மயிலும் வாழ்க
வெய்யசூர் மார்புகீண்ட வேற்படை வாழ்க அன்னான்
பொய்யில்சீ ரடியார் வாழ்க வாழ்கஇப் புவன
மெல்லாம்